**எம்பிலிபிடிய கல்வி வலயம்**

**இடர் கால முகாமைத்துவ செயலட்டை**

**தரம் - 04** **2021** **தமிழ் மொழி**

## அறிவித்தல்

- ❖ கண்ட இடங்களில் குப்பைகளை இடுவதைத் தவிர்க்கவும்.
- ❖ கூட்டுறவுக் கடை காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை திறந்திருக்கும்.
- ❖ வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்.
- ❖ பேருந்தில் பயணச்சீட்டின்றிப் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- ❖ கர்ப்பிணித் தாய்மார்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அறிவுறுத்தல்

- ❖ பொலித்தீன், பிளாஸ்திக் பொருட்களை கண்ட இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- ❖ நித்திரை கொள்ளும் போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம்.
- ❖ இடி,மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டாம்.
- ❖ பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பயணச்சீட்டைப் பெறாவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும்.

**கீழ்வரும் கூற்றுக்கள் அறிவித்தலாயின் அறிவித்தல் எனவும், அறிவுறுத்தலாயின் அறிவுறுத்தல் எனவும் அவற்றின் நேரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) வாகனங்களை அவதானமாக முந்திச் செல்லுங்கள். ...........................

2) இங்கே மதுபாவித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. ...........................

3) வீதியில் அல்லது வீதியோரங்களில் குப்பைகளை இடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. ...........................

4) மதகுருமார்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. ...........................

5) நீதிமன்றங்களின் அருகே வாகனங்கள் ஒலி எழுப்பத் தடை. ...........................

**கீழ்வரும் அறிவித்தல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பூர்த்தி செய்க.**

***புற்றுநோயை*** ***மின்தாக்குதல்*** ***பிளாஸ்திக்***

1) ......................... ஏற்பட வாய்ப்புள்ள இடங்களை நெருங்காதீர்கள்.

2) புகைப்பிடித்தல், வெற்றிலை பாவித்தல் போன்ற பழக்கங்கள் ........................... ஏற்படுத்தும்.

3) பொலித்தீன், ........................ பொருட்களை கண்ட கண்ட இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.